தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600 025.

இளநிலைத் தமிழியல் - பட்டம் **(B.A. TAMILOLOGY - Degree)**

இரண்டாம் பருவம்

நேரடி எழுத்துத் தேர்வு **(OFF - LINE WRITTEN EXAMINATION)**

மே, சூன் - **2015**

**P102** உரைநடையும் நாடகமும்

காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75

**(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)**

பிரிவு - 1

ஒரு சொல் / தொடரில் விடை தருக. **(15x1=15)**

1. உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் எனப் பெறும் இலக்கியம் எது?
2. தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதியவர் யார்?
3. எடுத்துரை உரைநடை என்பது எதனை ஒத்தது?
4. பாரதியாரின் சிறந்த உரைநடைக்கு எடுத்துக்காட்டான நூல் எது?
5. புதிய உரைநடையின் தந்தை என்றும், தமிழ் மேடைப் பேச்சின் தந்தை என்றும் போற்றப் பெறுபவர் யார்?
6. நாடக உருவாக்கத்திற்கு முன்னோடிக் கலைகளாக விளங்கியவை எவை?
7. நாடகம், கூத்து போன்ற கலைகளை எச்சமயங்கள் புறக்கணித்தன?
8. மனோன்மணீயம் எத்தனை அங்கங்களைக் கொண்டது?
9. ஒலி வங்கி என்றால் என்ன?
10. தமிழில் நாடகங்கள் எத்தகைய நாடகங்களாக உருவாக்கப்படுகின்றன?
11. நாடகத்தின் இருவகை முடிவுகள் யாவை?
12. சீவக வழுதி எந்நாட்டு அரசன்?
13. நாடக வளர்ச்சிக்காகப் பம்மல் சம்பந்தனார் நிறுவிய நாடக சபையின் பெயர் என்ன?
14. மாங்கனி, ஆட்டனத்தி ஆதிமந்தி குறுங்காப்பியங்களை இயற்றியவர் யார்?
15. கவிதை, கட்டுரை இரண்டிற்கும் அழகும், தெளிவும் ஊட்டுவது எது?

## பிரிவு - 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக. (5x3=15)**

1. பொம்மலாட்டாம் என்றால் என்ன?
2. நாடக வளர்ச்சியில் சிற்றிலக்கியக் காலம் குறித்து எழுதுக.
3. தெருக்கூத்து நாடகங்களில் கட்டியங்காரன் பங்கு பற்றி எழுதுக.
4. திராவிட இயக்க நாடகங்கள் – சிறு குறிப்பு எழுதுக.
5. உரைநடையின் வகைப்பாடு குறித்து எழுதுக.
6. உ.வே.சா.வின் உவமை விளக்கம் குறித்து எழுதுக.
7. அண்ணாவின் ‘அந்திக் கலம்பகம்’ என்ற படைப்புப் பற்றி எழுதுக.
8. மு. வரதராசனாரின் கடித இலக்கியம் குறித்து எழுதுக.

## பிரிவு - 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக. (3x15=45)**

1. (அ) உரைநடை நாடகங்களில் படைப்பாளர் நால்வரின் நடைச்சிறப்பை விரிவாக விளக்கிக் கட்டுரை ஒன்றனை வரைக.

(அல்லது)

(ஆ) தனித்தமிழ் இயக்கமும் மறைமலையடிகளார் நூற்களும் என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

2. (அ) மனோன்மணீயம் நாடகச் சிறப்புக் குறித்து விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) வானொலி நாடக வகைகள் என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

3. (அ) சங்கரதாசு சுவாமிகள் நாடகங்கள் குறித்து விரிவாக எழுதுக.

(அல்லது)

(ஆ) அண்ணாவின் உரைநடையின் தனித்தன்மைகளை எடுத்துக்காட்டி விளக்குக.

✲✲✲